# பெற்றோருக்கும் மற்றோருக்குமான கடமைகள்

**பெற்றோருக்கும் மற்றோருக்குமான கடமைகள்: புதிய சட்டக் கடப்பாடுகள்**

2019 யூனில், கனடா அரசாங்கம் *விவாகரத்துச் சட்டத்தில்* மாற்றங்களைச் செய்தது. மாற்றங்களிற் சில பெற்றோர் கடமை நேரத்தை அல்லது தீர்மானமெடுத்தற் பொறுப்பைக் கொண்டுள்ள, அல்லது *விவாகரத்துச் சட்டத்தின்* கீழ் ஒரு நீதிமன்ற விடயத்தில் தரப்பினராகவுள்ள பெற்றோருக்கும் மற்றோருக்குமான புதிய கடமைகளை உருவாக்குகின்றன. மாற்றங்களில் சட்ட ஆலோசகர்களுக்கான புதிய கடமைகளும் உள்ளடங்குகின்றன. இம்மாற்றங்கள் 2021 மார்ச்சு 1 ஆகையில் நடைமுறைக்கு வருகின்றன.

சிறுவர்கள் உள்ளடங்கும் எல்லாக் குடும்பச் சட்ட விடயங்களிலும் பிள்ளையின் சிறந்த நலன்களைக் கருதிச் செயற்படுவது முதலாம் முன்னுரிமையாகும்.

புதிய *விவாகரத்துச் சட்டம்* நீதிமன்றங்கள் ஈடுபாடாகும் போது உட்பட அவர்களுக்கு பிள்ளையின் சிறந்த நலன்களைக் கருதிச் செயற்பட உதவியாக பெற்றோருக்கும் மற்றோருக்குமான கடமைகளைக் குறித்துரைக்கின்றன.

*விவாகரத்துச் சட்டத்துக்கான* மாற்றங்களில் சட்டத்தின் கீழ் பெற்றோரும் மற்றோரும் தமது கடமைகளை நிறைவேற்ற உதவியாக சட்ட ஆலோசகர்களுக்கும் புதிய கடமைகள் உள்ளடங்குகின்றன.

இந்த ஆவணம்

- உங்களுக்கு ஒவ்வொரு கடமையையும் பற்றிய தகவல்களை வழங்கும், அத்துடன்
- உங்கள் சட்டக் கடப்பாடுகளை சிறப்பாக நிறைவேற்றுவது எப்படியென விளங்க உதவும்.

## இப்பக்கத்தில்

- **பிள்ளையின் சிறந்த நலன்களைக் கருதிச் செயற்படுதல்**
- **பிள்ளைகளை முரண்பாட்டிலிருந்து பாதுகாத்தல்**
- **குடும்பத் தகராறு தீர்க்கும் செயன்முறையைப் பயன்படுத்துதல்**
- **முழுமையான, துல்லியமான, இற்றையான தகவல்களை வழங்குதல்**
- **கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல்**
- **சான்றளித்தல்**
- **சட்ட ஆலோசகர்களுக்கான கடமைகள்**

- புதிய *விவாகரத்துச் சட்டத்தின்* கீழ் உங்களுக்கு ஒரு தொடர்புக் கட்டளை இருக்குமாயின், இக்கடமைகள் உங்களுக்கும் பொருந்துகின்றன.
- நீங்கள் தம்பதியரில் ஒருவராக இல்லாதிருந்த போதிலும் ஒரு பெற்றோரின் நிலையில் இருக்கிறீர்களாயின் அல்லது ஒரு பெற்றோரின் நிலையில் இருக்க உத்தேசித்திருப்பின், இக்கடமைகள் உங்களுக்கும் பொருந்துகின்றன.

*விவாகரத்துச் சட்டத்தின்* கீழ் தரப்பினருக்கு ஐந்து கடமைகள் உள்ளன

### 1) பிள்ளையின் அதிசிறந்த நலன்களைக் கருதிச் செயற்படுதல்

ஒரு பிள்ளையின் சிறந்த நலன்களைக் கருதித் தீர்மானங்களை மேற்கொள்வது முக்கியம். பிள்ளையின் சிறந்த நலன்கள் நீதிமன்றங்கள் பிள்ளைகள் உள்ளடங்கும் வழக்குகளைத் தீர்க்கும் போது பயன்படுத்தும் சோதனையாவதுடன், அவை இப்போது புதிய *விவாகரத்துச் சட்டத்தின்* கீழ் ஒரு முக்கிய கடமையாகும்.

புதிய *விவாகரத்துச் சட்டடத்தின்* கீழ், உங்களுக்கு பெற்றோர் நிலைக் காலம், தீர்மானமெடுத்தற் பொறுப்பு அல்லது ஒரு பிள்ளையுடன் தொடர்பு இருந்தால், நீங்கள் அவருக்கான உங்கள் பொறுப்புக்களை மேற்கொள்ளும் போது அப்பிள்ளையின் சிறந்த நலன்களின் கருதிச் செயற்பட்டாக வேண்டும்.

புதிய *விவாகரத்துச் சட்டத்தில்* ஒரு குறிப்பான நிலைமையில் உங்கள் பிள்ளைக்கு எது சிறந்ததெனத் தீர்மானிக்க உங்களுக்கும் நீதிமன்றங்களுக்கும்

உதவியாக குறிப்பான காரணிகளின் ஒரு பட்டியல் உள்ளடங்குகிறது. இவை பின்வருவன போன்ற காரணிகளாகும். பிள்ளையின்

- நிலைப்புக்கான அவரது தேவை போன்ற வயதுக்கும் விருத்தி நிலைக்கும் ஏற்ற தேவைகள்
- ஒவ்வொரு பெற்றோருடனுமான உறவு
- சகோதர சகோதரிகளுடனும் தாத்தா பாட்டிமாருடனும் அவரது வாழ்வில் ஏனைய முக்கிய ஆட்களுடனுமான உறவுகள்
- பிரிவுக்கு முந்திய பராமரிப்பு ஏற்பாடுகளும் பிள்ளையின் பராமரிப்புக்கான எதிர்காலத் திட்டங்களும்
- கண்ணோட்டங்களும் விருப்ப முன்னுரிமைகளும்
- ஆதிவாசி வளர்ப்பும் மரபும் உட்பட கலாச்சார, மொழியியல், சமய, ஆன்மிக வளர்ப்பும் மரபும்

ஏனைய காரணிகளில் ஒவ்வொரு பெற்றோரினதும் இவற்றுக்கான இயலுமையும் விருப்பமும் உள்ளடங்குகின்றன

- பிள்ளைக்கான பராமரிப்பு
- அடுத்த பெற்றோருடனான பிள்ளையின் உறவுக்கு ஆதரவளித்தல்
- பெற்றோர் நிலைப் பிரச்சினைகள் தொடர்பில் ஒத்துழைத்தலும் தொடர்பாடலும்

பின்வருவன போன்ற பிள்ளையின் பாதுகாப்பைப் பாதிக்கக் கூடிய வேறு காரணிகளும் இருக்கின்றன

- குடும்ப வன்முறை எதுவும் அதன் தாக்கமும்
    - அவ்வன்முறை நடத்தையில் ஈடுபட்ட எவருக்கும் பிள்ளையைப் பராமரிக்கவும் அதன் தேவைகளை நிறைவேற்றவும் இருக்கும் இயலுமையும் விருப்பமும்
    - பிள்ளையைப் பாதிக்கக் கூடிய பிரச்சினைகளில் ஒத்துழைக்குமாறு ஆட்களை வேண்டக் கூடிய ஒரு கட்டளையை ஏற்படுத்துவதன் பொருத்தம்
- பிள்ளையின் பாதுகாப்புக்கும் காத்தலுக்கும் நல்வாழ்வுக்கும் தொடர்புள்ளதாக நிலுவையிலுள்ள குடியியல் அல்லது குற்றவியல் வழக்குத் தொடுப்பு, கட்டளை, நிலைமை, அல்லது நடவடிக்கை எதுவும்

நீங்கள் உங்கள் பிள்ளையைப் பற்றித் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது இக்காரணிகளைக் கருத்திற் கொள்ளுங்கள். உதாரணமாக, நீங்கள் ஒரு புதிய பாடசாலையைத் தெரிவு செய்வதாயின், நீங்களும் அடுத்த பெற்றோரும் உங்கள் பிள்ளைக்கு எது சிறந்தது என்ற அடிப்படையிலேயே உங்கள் தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும். நீங்களும் அடுத்த பெற்றோரும் இணங்க முடியாவிடின், ஒரு நீதிபதி ஒரு தீர்மானத்தை மேற்கொள்ள மேற்படி இதே காரணிகளைப் பார்ப்பார்.

| |
|---|
| சிறந்த நலன் காரணிகளைப் பற்றி மேலும் தகவல்கள் இங்கே கிடைக்கப் பெறுகின்றன. |

## 2) பிள்ளைகளை முரண்பாட்டிலிருந்து பாதுகாத்தல்

நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்காகச் செய்யக்கூடிய ஆக முக்கியமான விடயங்களில் ஒன்று உங்களுக்கும் அடுத்த பெற்றோருக்கும் இடையிலான முரண்பாட்டைப் பார்க்கவோ கேட்கவோ செய்யாமல் அவர்களைப் பாதுகாப்பதாகும்.

புதிய *விவாகரத்துச் சட்டம்* உங்கள் பிரிவின் அல்லது விவாகரத்தின் விளைவாக ஏற்படக்கூடிய முரண்பாட்டிலிருந்து உங்கள் பிள்ளைகளைப் பாதுகாக்க நீங்கள் உங்களால் இயன்றதைச் செய்ய வேண்டிய ஒரு குறிப்பான கடமையை ஏற்படுத்துகிறது.

உங்களுக்கு இக்கடமையை நிறைவேற்ற உதவ, மனத்திற் கொள்ள வேண்டிய சில விடயங்கள் இதோ:

- உங்கள் பிள்ளைகள் செவிமடுக்கக் கூடிய போது உங்கள் நீதிமன்ற விடயத்தைப் பற்றிய விபரங்களைப் பற்றி விவாதிப்பதை அல்லது கலந்துரையாடுவதைத் தவிருங்கள் – அவர்கள் வீட்டில் இல்லாதிருக்கும் வரை காத்திருங்கள் அல்லது அவர்கள் செவிமடுக்க முடியாத ஓரிடத்துக்குச் செல்ல முயலுங்கள்
- பிள்ளைகளின் முன் அடுத்த பெற்றோரைப் பற்றி விமர்சிப்பதை அல்லது முறையிடுவதைத் தவிருங்கள்
- பிள்ளைகள் தாம் அடுத்த பெற்றோருக்கு எதிரான “பக்கத்தை எடுக்க” வேண்டுமென உணரச் செய்வதைத் தவிருங்கள்

ஒரு சட்டத்தரணி, நடுவர் அல்லது வேறு குடும்பச் சட்ட நிபுணர் உங்களுக்கு உங்கள் பிள்ளைகளை முரண்பாட்டிலிருந்து பாதுகாக்க உதவும் உபாயங்கள் தொடர்பில் உங்களுக்கு உதவலாம்.

## 3) ஒரு குடும்பத் தகராறு தீர்க்கும் செயன்முறையைப் பயன்படுத்துதல்

‘குடும்பத் தகராறு தீர்த்தல்’ என்பது *விவாகரத்துச் சடத்தில்* ஒரு புதிய பதமாகும். அது குடும்பங்கள் பெற்றோர் நிலை, குடும்ப உதவி, சில குடும்பங்களைப் பொறுத்த வரையில் சொத்து என்பன தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்கப் பயன்படுத்தக் கூடிய ஒரு நீதிமன்றத்துக்குப் புறம்பான ஒரு செயன்முறையாகும். குடும்பத் தகலாறு தீர்த்தற் செயன்முறைகளின் உதாரணங்களில் பேச்சுவார்த்தை, ஒத்துழைப்பான சட்டம், பிணக்குத் தீர்த்தல், நடுவர் தீர்ப்பு என்பன உள்ளடங்குகின்றன.

புதிய *விவாகரத்துச் சட்டத்தின்* கீழ், நீங்கள் ஒரு குடும்பத் தகராறு தீர்க்கும் செயன்முறையைப் பயன்படுத்தி, ஆனால் அது பொருத்தமாயிருந்தால் மாத்திரமே உங்கள் குடும்பச் சட்டப் பிரச்சினைகளைத் தீர்க்க முயல வேண்டும். உதாரணமாக, நீங்கள் குடும்ப வன்முறைக்கு ஆட்பட்டிருந்து தொடரும் பாதுகாப்புப் பிரச்சினைகள் இருந்தால், அல்லது உங்களுக்கும் அடுத்தவருக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வலுச் சமனின்மை இருந்தால் குடும்பத் தகராறு தீர்த்தற் செயன்முறைகள் பொருந்தாமற் போகலாம்.

ஒரு நீதிபதி உங்களுக்கான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டியிருப்பதற்குப் பதிலாக குடும்பத் தகராறு தீர்க்கும் செயன்முறையைப் பயன்படுத்துவதில் பல நன்மைகள் இருக்கின்றன:

- நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு என்ன தேவையென்பதை அறிவீர்கள். நீதிமன்றச் செயன்முறையின் போது உங்கள் குடும்பத்தின் ஒரு மேலெழுந்த பார்வையை மாத்திரமே காணும் ஒரு நீதிபதிக்கு இதனை விளக்குவது கடினமாகலாம்.
- குடும்பத் தகராறு தீர்த்தல் செலவு குறைவானதாகவும் நீதிமன்றத்துக்குச் செல்வதை விட மிக வேகமானதாகவும் இருக்கலாம்
- அது பெற்றோர் ஒத்துழைப்பதைக் காண்பதில் உங்கள் பிள்ளைகளுக்கு நல்லதாகலாம்
- சில குடும்பத் தகராறு தீர்த்தற் செயன்முறைகள் ஒருவருக்கொருவர் தொடர்பாடல் கொள்ளும் உங்கள் இயலுமையை மேம்படுத்த உதவலாம்

ஒரு சட்டத்தரணி, நடுவர் அல்லது வேறு குடும்பச் சட்ட நிபுணர் எக்குடும்பத் தகராறு தீர்த்தற் செயன்முறைகள் உங்களுக்குச் சிறந்தது என்பதைத் தீர்மானிக்க உங்களுக்கு உதவலாம்.

உங்கள் பகுதியில் அரசாங்க அடிப்படையிலான குடும்பத் தகராறு தீர்த்தற் செயன்முறை எதுவும் உள்ளதாவெனப் பார்க்க, நீங்கள் இங்கே கனடா நீதித் திணைக்களத்தின் வலைத்தளத்திலும் தேடலாம்.

| |
|---|
| மக்கள் பிரிவு அல்லது விவாகரத்துத் தொடர்பான பிரச்சினைகளைப் பற்றித் தீர்மானங்களை மேற்கொள்ளக் கூடிய பல வழிகள் இருக்கின்றன. நீங்கள் உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் சிறப்பாகச் செயற்படும் அணுகுமுறையைத் தீர்மானிக்க வேண்டும். நீங்கள் எச்செயன்முறையைப் பயன்படுத்தினாலும், உங்கள் பிள்ளைகளின் சிறந்த நலன்களிற் கவனஞ் செலுத்துவது முக்கியம். குடும்பத் தகராறு தீர்த்தல்: நீதிமன்றத்துக்குப் புறம்பே குடும்பச் சட்டப் பிரச்சினைகளைத் தீர்த்தல் - மெய்யறிக்கையில் ஆலோசனை பெறுங்கள். |

## 4) முழுமையான, துல்லியமான, இற்றையான தகவல்களை வழங்குதல்

புதிய *விவாகரத்துச் சட்டம்* தரப்பினர் *விவாகரத்துச் சட்டத்தினதும்* அதன் ஒழுங்குறுத்தல்களினதும் கீழ் தேவையான எல்லாத் தகவல்களையும் வழங்க வேண்டிய ஒரு கடமையைக் கொண்டுள்ளனர் என்கிறது. இது பெற்றோர் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளவும் நீதிமன்றங்கள் துல்லியமான தகவல்களின் அடிப்படையில் கட்டளைகளை இடவுமாகும்.

உதாரணமாக, சமஷ்டி சிறுவர் உதவி வழிகாட்டல்களின் (*விவாகரத்துச் சட்டத்தின்* கீழுள்ள ஒழுங்குறுத்தல்களின்) கீழ் நீதிமன்றத்துக்கு ஒரு நேர்மையானதும் துல்லியமானதுமான சிறுவர் உதவித் தொகையைத் தீர்மானிக்க உதவ, நீங்கள் முழுமையானதும் துல்லியமானதும் இற்றையானதுமான வருமானத் தகவல்களை வழங்க வேண்டும். அதாவது, நீங்கள் வழங்க வேண்டியவை,

- ஆக அண்மைய மூன்று வரி ஆண்டுகளில் ஒவ்வொன்றுக்குமான உங்கள் வருமான வரியறிக்கைகள்
- ஆக அண்மைய மூன்று வரி ஆண்டுகளில் ஒவ்வொன்றுக்குமான கனடா வருமான முகவரகத்திடமிருந்து பெற்ற கணிப்பீட்டு, மீள் கணிப்பீட்டு அறிவித்தல்கள்

உங்கள் நிலைமையைப் பொறுத்து, நீங்கள் பின்வருவன போன்ற ஏனைய தகவல்களையும் வழங்கத் தேவைப்படலாம்

- உங்கள் ஆக அண்மைய சம்பாத்தியக் கூற்று அல்லது சம்பளச் சிட்டை, அல்லது உங்கள் சம்பளத்தை அல்லது வேதனங்களைக் குறிப்பிட்டு உங்கள் தொழில் தருநரிடமிருந்து ஒரு கடிதம்
- நீங்கள் சுய தொழில் செய்பவராயின், அல்லது நீங்கள் ஒரு நிறுவனத்தைக் கட்டுப்படுத்துகிறீர்களாயின், உங்கள் நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள்
- தொழிற் காப்புறுதியிலிருந்து நீங்கள் பெற்ற வருமானத்தைப் பற்றிய தகவல்கள்

| |
|---|
| சிறுவர் ஆதரவு நோக்கங்களுக்காக முழுமையானதும் துல்லியமானதும் இற்றையானதுமான வருமானத் தகவல்களை வழங்கும் முறையைப் பற்றி மேலும் தகவல்கள் இங்கே கிடைக்கப் பெறுகின்றன. |

<u>வெவ்வேறு நீதிமன்றங்களில் குடும்பங்களின் ஈடுபாடு</u>

குடும்பங்கள் சில வேளைகளில் ஒரே நேரத்தில் வெவ்வேறு நீதிமன்றங்களில் ஈடுபாடாகின்றன. இது குற்றவியல் நீதி அமைப்பு, சிறுவர் பராமரிப்பு அமைப்பு, குடும்ப நீதி அமைப்பு ஆகிய யாவும் ஈடுபாடாகக் கூடிய குடும்ப வன்முறை வழக்குகளில் அடிக்கடி நிகழ்கிறது.

இந்நிலைமைகள் மிகவும் சவாலானவை. உதாரணமாக, ஒரு குடும்ப நீதிமன்றம் பெற்றோருக்கிடையே தொடர்பு எதுவும் இருத்தலாகாது எனக் கூறும் ஒரு

குற்றவியற் கட்டளையைப் பற்றி ஒரு குடும்ப நீதிமன்றம் அறியாதிருப்பின், நீதிபதி ஒரு முரண்பாடான பெற்றோர் நிலைக் கட்டளையை மேற்கொள்ளக் கூடும். இது இரு கட்டளைகளையும் பின்பற்றுவதைக் கடினமானதாக அல்லது சாத்தியமற்றதாக ஆக்கவும் பாதுகாப்பு இடர்ப்பாடுகளை ஏற்படுத்தவும் செய்யலாம்.

இதனைச் சமாளிக்க உதவ, புதிய *விவாகரத்துச் சட்டம்* நீதிபதிகள் விவாகரத்துப் பெறும் தம்பதியினர் தொடர்பாக நடைமுறையிலுள்ள அல்லது நிலுவையிலுள்ள குடியியற் பாதுகாப்பு, சிறுவர் பாதுகாப்பு, அல்லது குற்றவியல் வழக்குரைப்புக்கள் அல்லது கட்டளைகள் எவையும் உள்ளனவா என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டுமெனக் கூறுகிறது.

நீங்கள் விவாகரத்தாகி அல்லது விவாகரத்துப் பெறும் நிலையில் இருப்பதுடன் பெற்றோர் நிலைக்கான, பிள்ளை ஆதரவுக்கான அல்லது வாழ்க்கைத் துணை ஆதரவுக்கான ஒரு நீதிமன்றக் கட்ளையை வேண்டுகிறீர்களாயின், நீங்கள் அல்லது உங்கள் முன்னாள் வாழ்க்கைத் துணை ஈடுபட்டுள்ள எவையேனும் குற்றவியல் அல்லது சிறுவர் பாதுகாப்பு வழக்குகளை அல்லது கட்டளைகளைப் பற்றி, அல்லது உங்களில் ஒருவருக்கு எதிரான எவையேனும் மட்டுறுத்தல் அல்லது பாதுகாப்புக் கட்டளைகளைப் பற்றி நீங்கள் நீதிமன்றத்துக்குக் கூற வேண்டியிருக்கும்.

| |
|---|
| நீதி அமைப்பின் வெவ்வேறு பகுதிகளில் ஈடுபாடாகியுள்ள குடும்பங்களைப் பற்றி மேலும் தகவல்கள் இங்கே கிடைக்கப் பெறுகின்றன. |

உங்களுக்கு உங்களிடம் கேட்கப்படும் போது தேவையான எல்லாத் தகவல்களையும் நீதிமன்றத்துக்கு வழங்கும் ஒரு சட்டக் கடப்பாடு உள்ளது. நீதிமன்றங்களுக்கு வெளிப்படுத்தற் கட்டளைகளைப் பிறப்பித்தல் போன்ற *விவாகரத்துச் சட்டத்தின்* கீழ் தேவையான தகவல்களை வழங்குமாறு ஆட்களைப் பலவந்தப்படுத்த வழிகள் இருக்கின்றன, ஆனால் இது உங்கள் பிள்ளையின் சிறந்த நலன்களில் தாமதங்களை ஏற்படுத்துகிறது.

## 5) கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல்

புதிய *விவாகரத்துச் சட்டம்* நீதிமன்றம் ஒரு கட்டளையைப் பிறப்பித்ததும் நீங்கள் அக்கட்டளையைப் பின்பற்ற வேண்டுமெனத் தரப்பினருக்கு நினைவூட்டுகிறது.

இது ஒரு புதிய கடப்பாடல்ல, ஆனால் பெற்றோர் சில வேளைகளில் தாம் தமது குடும்பச் சட்டக் கட்டளைகளைப் பின்பற்றத் தேவையில்லை எனத் தவறுதலாக நம்புகின்றனர்.

உதாரணமாக, நீங்கள் கட்டளை அதன் மேலும் வலுவிலில்லாத வரை பிள்ளை ஆதரவுக்குப் பணம் கொடுக்க வேண்டும். அதாவது, நீங்கள் பிள்ளை ஆதரவுக்குப் பணம் கொடுப்பதை எப்போது நிறுத்தலாமெனக் கட்டளை

குறிப்பிடாவிடின், நீங்கள் ஒரு நீதிமன்றம் கட்டளையை மாற்றும் வரை பிள்ளை ஆதரவுக்குப் பணம் கொடுக்க வேண்டும்.

அதே போன்று, நீதிமன்றம் ஒரு குறிப்பான பெற்றோர் நிலை நேரசூசியைக் கட்டளையிடின், நீங்கள் மற்றப் பெற்றோரினால் பெற்றோராதல் நிலைக் காலத்தைப் பயன்படுத்தப்படுவதைக் காரணமின்றித் தன்னிச்சையாகத் தடுக்க முடியாது.

நீங்கள் கட்டளையைப் பின்பற்றாவிடின், மோசமான சட்டப் பின்விளைவுகள் ஏற்படலாம். உதாரணமாக, நீதிமன்றம் உங்களுக்கு எதிராக ஒரு நீதிமன்ற அவமதிப்புக் கட்டளையைப் பிறப்பிக்கலாம். பின்னர் நீதிமன்றம் பின்வருவன உட்பட பல்வேறு தண்டனைகளை விதிக்கலாம்

- நீதிமன்றத்துக்குச் செலுத்தப்படும் ஒரு தண்டம்
- நீதிமன்றச் செலவுகளுக்காக அடுத்த தரப்புக்குக் கொடுக்கப்படும் பணம் (உதாரணமாக, சட்டத்தரணியின் கட்டணங்கள்)
- சிறைக் காலம், கடுமையான வழக்குகளில்

**நினைவிற் கொள்ளுங்கள் – உங்களது கடமைகளாவன**

1) **உங்கள் பிள்ளைகளின் சிறந்த நலன்களைக் கருதிச் செயற்படுதல்**
2) **உங்கள் பிள்ளைகளை முரண்பாட்டிலிருந்து பாதுகாத்தல்**
3) **அது பொருத்தமானதாக இல்லாவிட்டாலே தவிர, தகராறு தீர்த்தலை முயல்தல்**
4) **உங்கள் நீதிமன்ற வழக்கில் தேவையான எல்லாத் தகவல்களையும் வழங்குதல்**
5) **உங்கள் நீதிமன்றக் கட்டளையைப் பின்பற்றுதல்**

உங்கள் வாழ்வில் அல்லது உங்கள் பிள்ளையின் வாழ்வில் நீதிமன்றக் கட்டளை உட்படுத்தாத ஒரு மாற்றம் இருந்தமையாற் சில வேளைகளில் நீங்கள் நீதிமன்றக் கட்டளையைப் பின்பற்ற விரும்பாதிருக்கலாம். நீங்கள் நீதிமன்றக் கட்டளை அதன் மேலும் உங்கள் பிள்ளையின் சிறந்த நலனில் இருப்பதில்லையென நம்பலாம்.

இந்நிலையில், புதிய நிலைமையைப் பிரதிபலிப்பதற்காக, நீங்கள் கட்டளையை மாற்றக் கோரி மீண்டும் நீதிமன்றத்துக்குச் செல்ல வேண்டியிருக்கும். கட்டளை மாறும் வரை, நீங்கள் மூல நீதிமன்றக் கட்டளையைப் பின்பற்ற வேண்டும்.

## சான்றளித்தல்

நீங்கள் உங்கள் கடமைகளை மீளாய்வு செய்து, நீங்கள் அவற்றை விளங்கிக் கொண்டதாகக் கூற வசதிப்படுவது முக்கியம்.

புதிய *விவாகரத்துச் சட்டத்தின்* கீழ், நீங்கள் நீதிமன்றத்தில் ஒரு ஆவணத்தைக் கோப்பிடும் ஒவ்வொரு தடவையும், அது ஒரு நீதிமன்ற விடயத்தைத்

தொடங்குவதாக அல்லது அத்தகைய ஒன்றுக்குப் பதிலளிப்பதாக இருந்த போதிலும், *விவாகரத்துச் சட்டத்தின்* கீழ் நீங்கள் உங்கள் ஐந்து கடமைகளிலும் ஒவ்வொன்றையும் விளங்கிக் கொண்டதை உறுதிப்படுத்த வேண்டியிருக்கும்.

இது ஒரு நீதிமன்ற விடயத்தில் ஒரு தரப்பினராக இருக்கும் எவருக்கும் பொருந்துகிறது. உங்களுக்கு ஒரு சட்டத்தரணி இருந்தாலும் அல்லது நீங்களே உங்களைப் பிரதிநித்துவம் செய்தாலும் நீங்கள் இதனை உறுதி செய்ய வேண்டியிருக்கும்.

## சட்ட ஆலோசகர்களுக்கான கடமைகள்

புதிய *விவாகரத்துச் சட்டத்தின்* கீழ், ஒரு சட்ட ஆலோசகர் என்பவர் அச்சட்டத்தின் கீழுள்ள வழக்குகளில் உங்களுக்குச் சட்ட ஆலோசனை வழங்க அல்லது உங்களைப் பிரதிநிதித்துவம் செய்யத் தகுதி பெற்ற ஒரு நிபுணராவார். சில மாகாணங்களில், அதில் ஒரு நொத்தாரிசு அல்லது சட்ட உதவியாள் உள்ளடங்கலாம்.

*விவாகரத்துச் சட்டத்துக்கான* மாற்றங்கள் அச்சட்டத்தின் கீழ் உங்களுக்கு உங்கள் கடமைகளில் உதவச் சட்ட ஆலோசகர்களுக்கும் புதிய கடமைகளை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக, சட்ட ஆலோசகர்கள் செய்ய வேண்டியவை

- தெளிவாகப் பொருத்தமற்றதாக இருந்தாலே தவிர, அவர்களின் குடும்ப விடயத்தில் ஒரு குடும்பத் தகராறு தீர்க்கும் செயன்முறையைப் பயன்படுத்த முயலுமாறு தமது சேவை பெறுநர்களை ஊக்குவித்தல்
- *விவாகரத்துச் சட்டத்தின்* கீழ் அவர்களுக்கு அவர்களின் குடும்ப விடயத்தைத் தீர்க்க அல்லது தமது கடப்பாடுகளை நிறைவேற்ற உதவக்கூடிய குடும்ப நீதிச் சேவைகளைப் பற்றித் தமது சேவை பெறுநர்களுக்குக் கூறுதல்

சட்ட ஆலோசகர்களுக்கு உங்களுக்கு உங்கள் கடமைகளை விளக்கும் ஒரு கடப்பாடும் உள்ளது.

| |
|---|
| குடும்ப நீதிச் சேவைகளைப் பற்றி மேலும் தகவல்கள் இங்கே கிடைக்கப் பெறுகின்றன. |

சட்ட ஆலோசகர்களுக்கு *விவாகரத்துச் சட்டத்தின்* கீழ் அவர்கள் தமது கடமைகளுக்குக் கீழ்ப்படிந்தமைக்குச் சான்றளிக்கும் ஒரு கடமையும் உள்ளது.

## தொடர்புள்ள தொடுப்புக்கள்

- திட்டங்களை ஏற்படுத்துதல்:பிரிவின் அல்லது விவாகரத்தின் பின்னர் பெற்றோர் நிலை ஏற்பாடுகளுக்கான ஒரு வழிகாட்டல்

- பெற்றோர் நிலைத் திட்டமிடல் சரிபார்ப்புப் பட்டியல்
- பெற்றோர் நிலைத் திட்டமிடல் கருவி
- பெற்றோர் நிலை மெய்யறிக்கை
- குடும்பத் தகராறு தீர்த்தல் மெய்யறிக்கை
- விவாகரத்தும் குடும்ப வன்முறையும் மெய்யறிக்கை